ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சு.வேணுகோபாலின் ஆட்டம் நாவலில் பெண்கள்

**க. சுகுணா[1] & N.M.கவிதா[2]**

**[1]பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், [2] உதவிப் பேராசியர்**

**தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு - 12.**

Mail Id: ksuguna618@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

நவீனத்தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கி வரும் எழுத்தாளர்களில் ஒருவர் சு.வேணுகோபால். பேராசிரியராக, படைப்பாளியாக, இலக்கிய விமர்சகராக, விவசாயியாக என பல பரிமாணங்களில் இயங்கிவரும் இவர் அழுத்தமான கதைக்கருக்களைக் கொண்டு புனைகதைகளைப் படைப்பதில் பெயர் பெற்றவர். இவர் சிறுகதைத் தொகுப்புகள், குறுநாவல், நாவல் என மூன்ஹ்று வகைகளிலும் அவர் தனது இலக்கியப் படைப்புகளை தந்துள்ளார். இவரின் கதைகள் பெரும்பாலும் நேரடியானவை மற்றும் விவரணைகள் மூலம் கதைக்களனை செறிவுபடுத்துபவையாக உள்ளன. விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த வாழ்வியலை அழுத்தமாகப் பதிக்கும் சு.வேணுகோபாலின் புதினங்களில் பெண்களின் பாத்திரப்படைப்புகள் மிகவும் நுட்பமானவை. பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும், அடையாளச் சிக்கல்களையும் இவரின் பல படைப்புகள் பதிவு செய்திருந்தாலும், ஆட்டம் நாவலின் பெண் கதைமாந்தர்களை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**முன்னுரை**

சு.வேணுகோபாலின் எழுத்து ஒரு எழுத்தாளரின் எழுத்து அல்ல. அது ஒரு விவசாயியின் எழுத்து என ஜெயமோகன் குறிப்பிடுகிறார். விவசாயியின் வாழ்க்கை முறையும் அவர்கள் படும் பாடுகளையும் வாதைகளையும், விவசாயம் பொய்க்கும் போது அவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளையும் தனது எழுத்தின் மூலம் அழுந்தப் பதிக்கும் சு.வேணுகோபால், இதனால் குடும்பங்கள் சிதிலமடைவதையும், உறவுகளுக்கிடையே ஏற்படும் சிக்கல்களையும், பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் அதன் போக்கில் நுட்பமாகச் சித்தரிக்கிறார்.

தமிழ் இலக்கியச் சூழலில் விவசாய எழுத்து என்றால் அது புதுமைப்பித்தனில் தொடங்கி கண்மணி குணசேகரன், சோ.தர்மன், சு.வேணுகோபால் போன்றவர்களால் தீவிரமாக எழுதப்பட்டு வருகிறது. நவீனமயமாக்கலுக்குப் பின் விவசாயம் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறது. விவசாய வாழ்க்கையை மையமாகக் கொண்டு சு.வேணுகோபால் படைத்த ஆட்டம் நாவலில் பெண் கதைமாந்தர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை இக்கட்டுரை விவாதிக்கிறது.

**ஆட்டம் நாவலில் பெண்கள்**

விவசாயம் பொய்த்துப் போனதன் காரணமாக பல விவசாயப் பொருட்கள் உள்ளூர் சந்தைகளுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இப்படி இறக்குமதி செய்யப்படுவதால் விளைவித்த பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமால் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். விலை கிடைக்காமல் ஏற்படும் இழப்பு, நிலத்தடி நீர் குறைந்து வருவது, வேலைக்கு ஆட்கள் கிடைக்காமை, வங்கிகளில் வாங்கிய கடனை திரும்ப கட்ட முடியாதது, விவசாய நிலங்களை ரியல் எஸஹ்டேட்களாக மாற்றுவது என பாரம்பரிய விவசாயக் குடும்பங்கள் தங்கள் நிலங்களை விற்று விடும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் தினக்கூலிகளாக திருப்பூர் பனியன் தொழிற்சாலைகளுக்கு செல்கின்றனர். ஆட்டம் குறுநாவலானது தேனியிலிருந்து திருப்பூர் சென்ற விவசாயி ஒருவனின் கதையைப் பேசுகிறது. தேனி மாவட்டத்திலிருக்கும் வீரபாண்டி மாரியம்மன் திருவிழாவானது அவ்வட்டாரத்தில் வாழும் அனைத்து மக்களுக்குமான முக்கியமாக நிகழ்வாக பார்க்கப்படுகிறது. நல்லது கெட்டது எதுவானாலும் அவள்தான் அம்மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பவள். பெரும்பாலான மக்களுக்கு குலசாமி வேறு என்றாலும் நீண்ட கால இடப்பெயர்வு மற்றும் விவசாய வாழ்வின் பின்புலத்தில் மாரியம்மன் முக்கிய தெய்வமாகி விடுகிறாள். இந்த வீரபாண்டி மாரியம்மன் திருவிழாவை மையமிட்டு ஆட்டம் நாவலின் கதைமாந்தர்கள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றனர்.

திருப்பூர் நகர வாழ்வு தரும் நெருக்கடி ஒரு பெண்ணை மடைமாற்றுகிறது. கணவனை விலக்கி வேறு ஆணைத் தேர்ந்தெடுத்தாவது உயிர் வாழ்தலுக்கான நெருக்கடியைத் தருகிறது. பெண் தன்னிலை ஆதிக்கமாக தகவமைந்து கொள்ளும் நிலையை கனகம் மூலம் வாசகர்களுக்கு காணப்பணிக்கும் சு.வேணுகோபால் கனகத்தின் கணவன் வடிவேலு பார்வையில் பின்வருமாறு இந்நிகழ்வை சித்தரிக்கிறார்.

இரண்டு குழந்தைகளுடன் தோட்டத்தை ஒத்தியிலிருந்து திருப்புவதற்கான பணத்துடன் திருப்பூரிலிருந்து வரும்போது வயது முப்பந்தைந்தைத் தொட்டுவிட்டது. கபடி விளையாடிக்கொண்டே அப்போதே ஒரு டிகிரி முடிக்க முடிந்தது. கம்பெனியில் கிடந்து நிம்மதியாக இரு குழந்தைகளுக்குச் சோறு போடவும் பள்ளிக்கு அனுப்பவும் முடிந்தது. கனகம் கம்பெனி மேனேஜருடன் காணாமல் போனதால் ஊருக்குத் திரும்ப வேண்டியதாகிவிட்டது. நாசமாய் போனவன் திருமணமாகாத ஒரு பெண்ணை இழுத்துக்கொண்டிருக்கக்கூடாதா? காதலித்த காலங்களைக் கனகம் எப்படி மறந்தாள்? (ஆட்டம், ப.24)

தன்னிடமிருந்து வெளியேறிய மனைவியின் இடத்தை கபடி ஆட்டத்தின் மூலம் நிறைவு செய்ய முயலும் கதைநாயகன் வடிவேலு, நரிக்குறவர்களின் வாழ்வியலைக் கடந்து தன்னை தகவமைத்துக் கொள்கிறான். ஆட்டம் புதினத்தில் நரிக்குறவர்களின் வாழ்வு, மொழி, தொழில், வழக்காறுகள் போன்றவற்றை சு.வேணுகோபால்

நுட்பமாகப் பதிவு செய்கிறார். இவரின் முக்கியச் சிறுகதையாகக் கருதப்படும் வாழும்கலை எனும் புனைவில் தற்கொலை செய்துகொள்ள முடிவெடுக்கும் நாயகன் பெண் கழைக்கூத்தாடியைப் பார்த்து தன்னை மீட்டெடுத்துக்கொள்கிறான். ஆட்டம் புதினத்தை இதன் இன்னொரு பரிமாணமாகக் கருதலாம். நாடோடிகளான நரிக்குறவர்கள் வாழ்வில் பெண்களின் தன்னிலை நெருக்கடிகள் அளப்பறியவை என்பதைப் பதிவு செய்தபடி மையக்கதைக்கு நகர்கிறது ஆட்டம் நாவல்.

கனகத்தின் பிரிவென்பது தற்செயலாகவோ, ஒரு முதிர்ச்சியடைந்த மனநிலையிலோ நிகழவில்லை என்பதை சு.வேணுகோபாலின் பின்வரும் விவரணையிலிருந்து அறியலாம்.

கனகம் முக்குத் திரும்பியபோது கூந்தலில் இருந்து வாடிய பூச்சரத்தை எடுத்து ஓரமாகப் போட்டுவிட்டு வந்தாள். முகத்தில் அபூர்வமான புன்னகை தவழ்கிறது. அந்த புன்னகையே அடிவெளுக்க வேண்டும் என்று ஊக்கியது. இந்நேரத்திலேயே வந்துவிட்டானே என்பதுபோல ஒரு பார்வை பார்த்துக்கொண்டு வந்தாள். அவள் வாசலை நோக்கித் திரும்பவும் சாக்கடை அடைப்பை எடுக்க வைத்திருந்த கனத்த குச்சியோடு தாவிச்சென்று தோளில் போட்டான். புலமான அடிதான். முதல் அடிக்குக் கத்தாமல் வீட்டிற்குள் நுழைவதிலேயே குறியாக அவனைத் தள்ளி மேலேறி வர முயன்றாள். மறுபடியும் அடி விழ முறைக்காமல் எதுக்கு இப்ப அடிக்கிற என்று பல்லைக்கடித்துக்கொண்டு சொல்லியபடி உள் நுழைய முயன்றாள். மூர்க்கமாகத் தெருவில் தள்ளி வெறி ஏற ஏற சக்கைத் தட்டுவதுபோல அடித்து நொறுக்கினான். வலி பொறுக்காமல் கத்தத் தொடங்கினாள். அபயக்குரல் அது. மண்டையிலும் விழுந்தது அடி. பொடுபொடுவென ரத்தத் துளிகள் வந்தன. பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் ஓடிவந்து விலக்கினர். (ஆட்டம், ப.33).

ஊமைவெய்யில் ஏற்படுத்தும் புழுக்கத்தைப் போல இந்த நிகழ்வு வடிவேலின் மனதில் படிந்திருப்பதை சு.வேணுகோபால் கோடிட்டுக் காட்டுகிறார்.

நேரியல் அல்லாது முன்னும் பின்னுமான காலநிலையில் விவரிக்கும் ஆட்டம் கதையானது அறிமுகப்படலம் தாண்டி கதைமாந்தர்களை பின்கதைகள் மூலம் விவரித்து பாத்திரங்களை செறிவூட்டுகிறது. வடிவேலுவின் நண்பன் காளையன் மூலம் நாகமணியை இந்த முறையில் நாவல் அறிமுகப்படுத்துகிறது.

நாகமணியின் கணவன் ஊரிலேயே மிகப்பெரிய மளிகைக் கடை வைத்திருக்கிறார். அதுபோக தோட்டமும் உண்டு. அறுப்புக்கு காவலாகவும் போகக் கூடியவர். சதாகாலமும் பலசரக்குக்கடை, விவசாயம், அறுப்பு, சந்தை, காவல் என ஓயாது சுற்றுவதால் அவரின் இன்மையை போக்கிக்கொள்ள நாகமணி காளையனை பயன்படுத்திக்கொள்கிறாள். இந்த முறையற்ற செயலை காளையன் வடிவேலுவிடம் பகிர்ந்து கொள்கிறான்.

பின்னிரவு ஒன்றில் நாகமணியுடன் கூடியதை நடுக்கத்துடன் வடிவேலுவிடம் சொல்லும் காளையனை மோகித்து அதை நாகமணி வாடிக்கையாக்கிக்

கொண்டதையும், அந்த மாயச்சூழலில் சிக்கி காளையன் வெளிவரமுடியாத நிலையில் இருந்ததையும் சு.வேணுகோபால் பின்வருமாறு சொல்கிறார்.

இதிலென்ன குழப்பம் அறிவைப் பிய்த்தெறிந்துவிட்டு உடலை மட்டும் உருவி இழுத்துச் சுற்றும் மாயச்சுழல் அது. இல்லை, நினைப்பில் தோன்றி அறிவில் வேர்கொண்டு கற்பனையில் கிளைத்துத் தழைத்துப் பெருகும் பெருமரம் அது. (ஆட்டம், ப.58).

நாகமணியின் காமத்திற்கு பணிந்து கிட்டத்தட்ட அவளின் அடிமையாகவே காளையன் மாறிப் போகிறான். மோகித்த பின் வந்த நாட்களில் அவள் காளையனுக்கு விதவிதமாக சமைத்துப் போடுகிறாள். ஆடு, கோழி, மீன் எது கிடைக்கிறதோ வாங்கி வகைவகையாய் சமைத்துப்போடுவது வாடிக்கையாகிவிடுகிறது. அவளுடைய கட்டுத்தறியில் கட்டிவைத்திருக்கும் பொலிகாளை போலாகிவிடுகிறான் காளையன். இருத்தலியல் சிக்கல் இல்லாத கதாபாத்திரமாக நாகமணி சித்தரிக்கப்படுகிறாள். ஐந்தாண்டுகள் நாகமணி விரும்பியதையெல்லாம் செய்த காளையனின் தொடுப்பு அரசல்புரசலாக தெரிய ஆரம்பிக்கும்போது அவசர அவசரமாக அவனுக்கு திருமணம் செய்து வைக்கப்படுகிறது.

காளையன் விலகிவரவும் நாகமணி சந்தனத்தேவர் மகன் தவமணியை கவிழ்த்துப்போட்டிருந்ததாக நாவல் நகர்கிறது. தொடர்ந்த பெருந்தீனி காரணமாக காளையன் எடை கூடி குண்டடித்திருந்ததன் காரணமாக முன்புபோல் கலவியில் திருப்தி இல்லாமல் அவனை நாகமணி தவிர்க்க ஆரம்பிப்பதையும் நாவல் போகிற போக்கில் சொல்லிச் செல்கிறது. தவமணியுடனாக தொடர்பும் அறுபடுகையில் குப்புராஜின் மகன் சிவபாலன் நாகமணிக்கு கள்ளக் காதலனாகிறான்.

நாகமணியின் பின்கதை காளையின் அம்மா ஆதங்கம் தாங்கமால் விட்ட வசைமார்ஹியில் தெரியவருகிறது. நாகமணியை பெண்பார்க்கச் சென்ற கூட்டத்தில் அவளும் ஒருத்தி என்பதால் அவளுக்கு இது தெரிந்திருக்கிறது. மல்லனூரில் நாகமணி தன் தாயுடன் சேர்ந்து கள்ளுக்கடையில் வேலை செய்திருக்கிறாள். அவள் அப்பா இவள் ஆறாம் வகுப்பு படிக்கும்போதே வீட்டை விட்டு ஓடிப்போயிருக்கிறான். அம்மாவிற்குத் துணையாக டம்ளர் கழுவி வைக்கும் வேலையை செய்து வந்திருக்கிறாள் நாகமணி. வறுமையின் காரணமாக காமப்பார்வைக்கிடையே கள்ளுக்கடையில் வேலை செய்திருக்கிறாள். கள்ளுக்கடை விவரணையில் அங்கு வந்து போகும் மனிதர்களைக் கூட சு.வேணுகோபால் பெண்கள் பாற்பட்டு வந்ததாய் இயம்புகிறார்.

தெருவில் வேட்டி இழுபட தள்ளாடியபடி புணர்ச்சி வார்த்தைகளை அள்ளி வீசியபடி செல்லும் மனிதன். மனைவியின் கள்ளத்தனத்தைச் சொல்லி அழும் மனிதன். தங்கையின் காதல் உறவைச் சொல்லி வேதனைப்படும் மனிதன். தாயை அடித்துப்போட்டு வந்ததற்காக வேதனைப்பட்டு இன்னும் இன்னும் வாங்கிக் குடிக்கும் மனிதன். பணம் பணம் என்று பிய்க்கும் மனைவியிடம் தப்பித்து குடித்து மயங்கும்

ISSN:2582-9599

மனிதன். கலவிக்கு வராதவளை ஏசும் மனிதன். வாங்கிய கடனுக்கு வட்டி மேல் வட்டி கட்டி சாபமிடும் மனிதன். எவனுக்கோ மனைவியாகிப் போன காதலியை நினைத்துப் புலம்பும் மனிதன். எத்தனை எத்தனை மனிதர்கள்! பூட்டிய கதவுகள் திறக்குமிடம். தெரியாத இடமெல்லாம் கிழிந்து தெரியும் இடம். (ஆட்டம், ப.60).

வடிவேலுவிடம் அவ்வப்போது தோன்றும் மனைவியைத் தேடிக் கண்டு இழுத்து வரலாமா? என்கிற எண்ணமானது அவளில்லாமலேயே குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்கிற வீம்பும் வைராக்கியமாக அவ்வப்போது மாறும். மனைவியில் கள்ளக்காதலால் அவளைப் பிரிந்து பொறுமும் வடிவேலு அதற்கு நேர்முரணாக நாகமணியைப் பார்த்து மோகம் கொள்வதும் அவளை அடைய முயற்ச்சிப்பதும் நடக்கிறது. கனகம் மீது கொண்ட காதலையும், நாகமணி மீதான காமத்தையும் பின்வரும் பகுதியில் சு.வேணுகோபால் விவரிக்கிறார்.

அவளோடு (நாகமணியோடு) ஊரைவிட்டு ஓடிப்போகவேண்டும் என்று காளையனுக்கு பெருத்த திட்டம் இருந்தது. அதனை அவள் மதிக்கவேயில்லை என்பதுதான் உண்மை. நாகமணி காதலை நாடியிருந்தால் அது நடந்திருக்கலாம். முறை சரியாக இருந்தால் நிகழ்ந்திருக்கும் என்று உறுதியாகவும் சொல்லிவிட முடியாது. இனி அது இல்லை. நாகமணி விரும்பியது உணர்ச்சி உச்சத்தின் துடிப்பை அப்படியே தன் உடலில் நிலைநிறுத்திவிடும் ஆண் மகனைத் தேடிய ஆவேசம்தான். கள்ளூறி ஏறிய போதை திரும்ப இறங்கி இல்லாது போவது போல, காமம் ஒரு மாயம் என்பதை திரும்பத் திரும்ப நாகமணி கண்டாளோ. காதலும் ஒரு மாயை விளையாட்டுதான் என்று கனகமும் ஒருநாள் உணரக்கூடும். (ஆட்டம், ப.80).

பெண் மாந்தர்களின் இருத்தலியல் மற்றும் பாலியல் சிக்கல்களை கதைபோகும் போக்கில் சொல்லிச்செல்லும் எழுத்தாளர், வடிவேலுவின் தங்கை பரிமளம் மூலமாக நினைவில் அடுக்கில் எங்கோ புதைந்து போன தனது ஆத்தாவின் முன் வாழ்க்கைஹையும், அவனுக்கு இருக்கும் ஒரு அக்காவைப் பற்றியும் சொல்லுவதாக கதை நகர்கிறது. வடிவேலுவின் மனதில் எவ்வாறு அந்த நிகழ்வு பதிந்திருக்கிறது என்பதை பின்வரும் விவரணையில் அறியலாம்.

ஆத்தா முதல் புருசனை தீர்த்துவிட்டு வரும்போது அந்த அக்காவை அழைத்துக்கொண்டு வரவில்லை. அதற்காக அழுதிருப்பாள். அவர்கள் தர மறுத்திருக்கலாம். நீண்டகாலம் இன்னொரு அக்கா தொப்பம்பட்டியில் இருக்கிறது என்று தெரியாது. 9ம் வகுப்பு படிக்கும்போதுதான் தெரிய வந்தது தனக்கு ஒரு அக்காள் இருக்கிறாள் என்று. ஆத்தாவை எதிர்கொண்டு பார்க்கவே வெக்கமாகவுட் வேதனையாகவும் இருந்தது அன்று பூராவும். மூணுசாமி கெடாவெட்டின்போது சுருளிவீட்டு ஒச்சாயிக் கிழவி சொன்னது. டேய்... உனக்கு இந்த ஊரில ஒரு அக்கா இருக்காடா... நிறுத்தி வைத்து விபரம் கொன்னது. ஆத்தாவும் ஈதபற்றி எதுவுமே சொன்னதில்லை. அந்த வருடம் மாரியம்மன் விழாவில்தான் அந்த அக்காவைப் பார்த்தது. ஆத்தா முகஜாடையில் இல்லை. மாநிறத்தில் ஊக்கம் மிக்க உருவத்தில் இருந்தாள். (ஆட்டம், ப.92).

அம்மாவிற்கு முன்பே திருமணமாகி அதன் மூலம் ஒரு பெண்குழந்தை இருப்பதை ஒருவகையில் வடிவேலுவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் தொட்டுத் தொடர்பு ஏதும் இல்லாமல் வீரபாண்டித் திருவிழாவில் மட்டும் அவர்கள் சந்தித்துக் கொள்வதால் ஏதும் பிரச்சனையில்லை என்று இருப்பதாகத் தெரியவருகிறது.

சிறுவயதில் வடிவேலு அவன் அக்காவை திருவிழாவின் சந்தைக் கடைகளின் நடுவே சந்தித்ததை பின்வருமாறு சு.வேணுகோபால் விவரிக்கிறார்.

...கூட்டுக்காரிகளோடு வந்த அந்த அக்கா நான் யார் தெரியுமா என்கிறது. உண்மையில் யாரென்று தெரியவில்லை. ஏதோவொன்று ரொம்ப பழகிய தடமாக மிதக்கிறது. உன்னோட அக்கா. உன் சொந்த அக்கா நெஞ்சைத் தொட்டுச் சொல்கிறது. கூச்சமும் சங்கடமும் அவனை நெளிய வைக்கிறது. ஆத்தாவைப் பார்க்கிறான். அவள் வாயில் சீலைத் துணியைச் சுருட்டி வைத்திருக்க இமைகளில் நீர் கோர்க்கிறது. ஆத்தாவின் மூக்கு அப்படிச் சிவந்ததை அதற்குமுன் பார்த்ததேயில்லை. அக்கா இன்னும் குனிந்து அவன் கன்னங்களைத் தொடுகிறது. இரண்டு கைவிரல்களையும் எடுத்து சொடுக்கித் தன் கன்னத்தில் வைக்கிறது. அவனை அணைத்துக் கொஞ்ச வருகிறது. வெடுக்கென பிடுங்கிக்கொண்டு ஒரே ஓட்டம். அந்த முகம் பின்தொடர்ந்தே வருகிறது. ஆமாம். ஆத்தாவின் அதே கண்கள், அதே உதடுகள்.

பெண்களின் தன்னிலைக்கு திருவிழாக்கள் என்பவை, ஆழ்மனதோடு சம்பந்தப்பட்டவை. திருவிழாவிற்கு வரும் வடிவேலுவின் தங்கை பரிமளம் அக்கா பற்றிச் சொல்லியதோடில்லாம் இருவரும் சந்தித்ததை அவன் நினைத்துப் பார்க்கிறான். இரண்டாம் மணத்திற்கு பிறகு அம்மா எப்படி அவளை முதன்முறை பார்த்திருப்பாள் என்று அவனுக்கு தோன்றுகிறது. கிளைவழி பந்தங்களுடன் சிறுமியாய் கோவில் திருவிழாவிற்கு வந்தவளை அவள் பார்த்திருக்கக்கூடும் என யூகிக்கிறான். வருடாவருடம் திருவிழாவிற்காய் காத்திருந்து அந்த பெரும்கூட்ட நகர்வில் மகளை காணும் சில நிமிடங்களுக்காய் கால் கடுக்க நின்றிருக்கலாம் என்று அவனுக்கு தோன்றுகிறது. தாயின் பேரன்பை அள்ளி அனுபவிக்க வருடம் முழுக்க அந்த அக்கா காத்திருந்திருக்கலாம். மனதில் வெறுமையையும். பேரன்பையும் ஒருசேர சுமந்தபடி ஆத்தா தன்னையும் தங்கையும் வளர்த்திருக்கிறாள் என்று அவனுக்கு தோன்றியதில் ஆச்சரியமில்லை.

விவசாய வாழ்வு என்பது பெரும்பாலும் ஆண்களோடு தொடர்புபடுத்தப்படுவது வழக்கம். ஆனால் சு.வேணுகோபாலின் கதைகளில் விவசாயம் பொய்ப்பதால் பெண்கள் அடையும் துயரங்களும் நுட்பமாக காட்சிப்படுத்தப்படுகின்றன. அதன் காரணமாகவே கனகத்துடன் திருப்பூர் பயணப்படும் வடிவேலு அவளின் தன்னிலை மாற்றத்தால் மீண்டும் ஊர் வந்து சேர்வதும், ஏளனங்களுக்கு பதிலடியாய் தனது கபடி ஆட்டத்தை பயன்படுத்த நினைப்பதும் விவரிக்கப்படுகிறது. நாகமணியின் தீராத காம இச்சையையும் அதன் பொருட்டு வடிவேலுவின் மோக உணர்ச்சிகளும் பேசப்படும் அதே வேளையில் ஆத்தாவின் உளநெருக்கடியும், மகளைப் பேணமுடியாத அகச்சிக்கலுமாய் நகரும் கதையில் நரிக்குறவர்களின் நாடோடி வாழ்வு சிறப்பாய்

பயன்படுத்தப்பட்டு பெண் தன்னிலையை பிறிதொரு தளத்திற்கு கொண்டு செல்கிறது. குறிப்பாக நாவல் முழுவதும் வெவ்வேறு இடங்களில் காட்சிப்படுத்தப்படும் குட்டிகளை இழந்த நாயின் தீராத் தேடுதல் போல பெண் மாந்தர்கள் காலந்தோறும் எதோவொன்றை தேடியலைவதை உருவமாக பயன்படுத்தியுள்ளது சிறப்பு.

**முடிவுரை**

இலக்கியம் என்பது ஒரு வாழ்வை காட்சிப்படுத்துவதோ, விவரிப்பதோ மட்டும் இல்லை. வாழ்வின் சிக்கல்களையும் அபத்தங்களையும் பொருள் கொள்ளும் பொருட்டு அளாவுவதும், உணர்ச்சியின் போக்கில் நிகழும் சூழல்களை எதிர்கொள்ளும் பக்குவத்தையும், புரிந்து கொள்ளும் நுட்பங்களையும் அகழ்ந்து எழுதுவதாகும். தனது நுட்பமாக விவரணைகள் மூலமாகவும், கூர்ந்த அவதானிப்பு மற்றும் புறச்சித்தரிப்புகள் மூலம் பெண் கதைமாந்தர்களின் சூழலை கட்டமைக்கும் பாணியானது சு.வேணுகோபாலின் வலிமையாகக் கொள்ளலாம்.

துணைநூற்பட்டியல்

1. வேணுகோபால், சு., ஆட்டம், தமிழினி பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2013.

2. இராமலிங்கம், மா., நாவல் இலக்கியம், தமிழ் புத்தகாலயம், 1972.

3. ஜெயமோகன், ஜெ., நாவல் கோட்பாடு, கிழக்குப் பதிப்பகம், சென்னை, 2010.

4. ஜெயமோகன், ஜெ., பதாகை நேர்காணல், 2021.

5. செல்வபுவியரசு, ஆட்டம்: உள்ளத்தின் ஒளிவீச்சு, தி இந்து நாளிதழ், 9.4.2014 பதிப்பு.

6. எட்கர் தட்ஸஹ்டன், தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2005.